பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 12 செவ்வாய்க்கிழமை 25.01.2022 கதிர் 81

**இனி இது ரகசியம் அல்ல!**

இந்திய – இலங்கை மீனவர் சர்ச்சை உணர்வுபூர்வமான விடயம். எதிரித்தனத்தோடு கையாள முடியாது. 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று போட்டுடைக்கவும் கூடாது. அதேசமயம் காலத்தை இழுத்தடித்து விவகாரம் புரையோடிப்போகவும் விடக்கூடாது. ☞2

# ராஜபக்ஷக்களின் காட்டாட்சியை வீழ்த்த சஜித் – சம்பிக்க கரம் கோர்க்க வேண்டும்



## மனோ எம்.பி. கோரிக்கை

நாம் முன்னோக்கிச் சென்று, ராஜபக்ஷக்களின் இந்தக் காட்டாட்சியை வீழ்த்த வேண்டும் என்றால் சஜித் பிரேமதாஸவும், சம்பிக்க ரணவக்கவும் முரண்பாடுகளை மறந்து கரம் கோர்க்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். ☞9



## ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சி விரைவில் மலரும்!



### நான்தான் அடுத்த பாதுகாப்பு அமைச்சர் என்று பீல்ட் மார்ஷல் பொன்சேகா விளாசல்

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி விரைவில் மலரும். அந்த ஆட்சியில் நான்தான் பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிப்பேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மீண்டும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- ☞9

## ஒமிக்ரோன் இங்கு தாண்டவமாடினால் பொருளாதாரம் மேலும் பாதிப்படையும்

### உடன் கட்டுப்படுத்துமாறு அரசிடம் ரணில் வலியுறுத்து

இலங்கையின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசு ஒமிக்ரோனைக் கட்டுப்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ☞9



## ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்




வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ☞9

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கும் கொரோனாத் தொற்று

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ☞9

## பொதுவெளியில் அரசை விமர்சிப்பதை நிறுத்துக!

### பங்காளிகளுக்கு பீரிஸ் உபதேசம்



அரசின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பதற்கு பங்காளிக் கட்சிகளுக்கு உரிமை இருக்கின்றது. ஆனால், ☞9

## ஆயிரக்கணக்கான பிரச்சினைகளுக்கு கொரோனாத் தொற்றே அரசின் பதில்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



மூன்று வேளையும் சாப்பிட்டு நலமாக வாழ்ந்த மக்கள் இன்று மிகவும் ஆதரவற்ற நிலையில் உள்ளனர் எனவும், உரத்தைத் தடை செய்த அரசு பயிர்ச்செய்கை மேற்கொண்ட ☞2

## ரோஹிணி எம்.பிக்கும் கொரோனா

ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்னவுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

அவர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## திருட்டு மோ. சைக்கிள் மோதி சுன்னாகத்தில் ஒருவர் மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.25

சுன்னாகத்தில் மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டு ஓடியவர் மோதி விபத்திற்குள்ளானதில், குடும்பஸ்தரான மற்றொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டு ஓடியவரும் படுகாயமடைந்தார்.

இந்த விபத்தில் உடுவிலைச் சேர்ந்த இராசா இரவிச்சந்திரன் என்பவரே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளைத் திருடிக்கொண்டுதப்பிச்சென்றவரின் மோட்டார் சைக்கிள் ☞9

## கொக்குவிலில் நேற்றிரவு வன்முறைக் குழு அடாவடி

### வீடு, கார் அடித்து நொருக்கப்பட்டன இரண்டு மோ.சைக்கிள்களும் எரிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கில் ஒரு வீட்டை அடித்து நொருக்கிய வன்முறைக் கும்பல்வாகனங்களிற்கும்தீவைத்து விட்டுத் தப்பிச் சென்றது.

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலை அண்டிய பகுதியில் உள்ள ஐஸ் கிறீம் உற்பத்தி நிலையம் இயங்கும் வீட்டிற்குள் நேற்று இரவு புகுந்த வன்முறைக் கும்பலே இந்த அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வாள்கள், கம்புகள், கொட்டன்கள் சகிதம் புகுந்த குழுவினர் முதலில் வீட்டை அடித்து ☞9

## கைக்குண்டு விவகாரத்தில் அரசும் பொலிஸும் நாடகம்

### உண்மைத்தன்மை வெளிவரும் வரை போராடுவோம் என்று பேராயர் அதிரடி

பொரளை அனைத்துப் பரிசுத்தவான்களின் தேவாலயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டைப் பிறிதொரு தரப்பின் மீது சுமத்திவிட்டு, அதிலிருந்து நழுவிச் செல்ல அரசு மற்றும் பொலிஸாருக்கு இடமளிக்கப்பட மாட்டாது எனப் பேராயர் கர்தினால் மெல்கம் ☞9



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கவனமாகக் கையாள வேண்டும். சமய, சந்தர்ப்பம் பார்த்துத்தான் காய்கள் நகர்த்தப்பட வேண்டும்.

'சட்டம் தன் கடமையைச் செய்யும்' என்று கூறி சம்பந்தப்பட்டோர் ஒதுங்கக் கூடிய விவகாரம் அல்ல இது.

பொருளாதார, நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை, கடன் இறுக்க வகையற்ற நாடு என்ற அவப் பெயரைச் சம்பாதிக்காமல் இருப்பதற்காக விரைந்து இந்தியா கைகொடுத்த தருணம் இது.

'அயலகத்துக்கே முக்கியத்துவம்' என்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கைத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு விரைந்து கைகொடுக்க பாரதம் முன் வந்த இந்தச் சமயத்தில், தமிழக மீனவர்களிடமிருந்து, இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்காகப் பறிமுதல் செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்ட படகுகளை பகிரங்க ஏலத்தில் விடுவதா என்ற நெருடல் என் மனத்திலும் ஆழமாக ஓடியது.

இலங்கைச் சட்டப்படி, கைப்பற்றப்பட்ட அந்தப் படகுகள் அரசுடமையாக்கப்பட்டு விட்டன. ஆகவே அது பற்றி இலங்கை அரசு எந்தத் தீர்மானமும் எடுக்கலாம் எனப் பலரும் நியாயம் பிளக்கலாம். நிச்சயமாகப் பிளப்பர்.

மீனவர் அத்துமீறலைத் தடுப்பதற்கு சட்ட ரீதியான வழி இதுதான் என்றும் கூட அவர்கள் வாதிடுவர்.

தமிழக மீனவர்களின் விசைப்படகுகள், ட்றோலர்கள் உட்பட 105 கடற்கலங்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படுகின்றன என்ற தகவலை காலைக்கதிர்தான் முதலில் வெளியிட்டது. அது வெளியான விடிகாலை வேளையில் இருந்து தமிழக ஊடகங்கள் அச்செய்திக்குக் கொடுத்த முக்கியத்துவத்தையும், அப்படிப் பகிரங்க ஏலத்தில் படகுகளை விற்கும் இலங்கை அரசின் தீர்மானம் தமிழக மக்களின் மனதில் ஏற்படுத்திய நோவு, எரிச்சல், சீற்றம் போன்றவற்றையும் நான் அறிந்தும், உணர்ந்தும் கொண்டேன்.

அது தொடர்பில் என் மனதில் ஓடிய எண்ணத்தை நேற்று கவிஞர் வைரமுத்து தமது ருவிட்டர் செய்தியில் வெளியிட்டமையைக் கண்ணுற்றேன். அந்த வரிகளிலேயே என் வாசகர்களுக்கு அதனைச் சமர்ப்பிக்கிறேன்:-

இலங்கை அரசின்
பிடியிலிருக்கும்
105 மீனவப் படகுகளும்
மீட்கப்பட வேண்டும்.

அலை விரிக்கும்
சமுத்திரத்தில்
வலை விரிக்கும் மீனவர்க்குப்
படகுதான் கடல் கடவுள்.
அவை உரியவரிடம்
ஒப்படைக்கப்பட வேண்டும்.

இலங்கைக்கு
இந்தியா கொடுத்த கடன்
திரும்புமோ இல்லையோ
படகுகள் திரும்ப வேண்டும்.

- இந்த முடிவு - படகுகளை ஏலம் விடும் தீர்மானம் – தமிழக மீனவர்களின் மனதில் ஆழ ரணமாகப் பதியும். அது நம் தமிழர் இன உறவிலும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

பகிரங்க ஏலத்தில் விடும் தீர்மானம் கொழும்பு அரசின் முடிவு. அதில் இலங்கைத் தமிழர் தரப்பு எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பது கேள்விக்குறிதான்.

குறைந்த பட்சம் இந்த வேதனையான முடிவின் பக்கம் பின்புலமாக ஈழத் தமிழர்களின் ஆத்மார்த்தமான ஆதரவு இல்லை என்பதையாவது நமது தமிழக உறவுகளுக்கு நாம் பகிரங்கமாகக் காட்ட வேண்டாமா?

இலங்கை மீனவர்களின் கடலில் அத்துமீறுவது, வலைகளை அறுப்பது, அவர்களின் வாழ்வாதாரத்தை நாசப்படுத்துவது எல்லாம் தீச்செயல்தான். அதன் தொடர் விளைவுதான் இப்படிப் படகுகள் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதும் கூட.

ஆனாலும், ஈழ யுத்த காலத்தில் கூட தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து ஈழத் தமிழர்களுக்கு உதவிய ஒரு சமூகத்தின் வாழ்வாதாரமான ட்ரோலர்கள், விசைப்படகுகள் இப்படி கொள்ளை போவது சகிக்க முடியாததாகவே இருக்கின்றது.

எங்கே, இதற்காக தமிழக மீனவர்களுக்கு எங்கள் கவலையைத் தெரிவித்தால் இங்கு ஈழத்தில் மீனவரின் வாக்குகள் பறிபோய் விடுமோ என்ற அச்சத்தில், இவ்விடயத்தில் பாதிக்கப்படுகின்ற தமிழக மீனவர்களுக்காக பச்சாதாபக் குரல் எழுப்பாத ஈழ அரசியல்வாதிகளைப் பார்க்க இன்னும் பாவமாக – பரிதாபமாக – இருக்கின்றது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

★ ★ ★

நாட்டில் விரைவில் - அல்லது முற்கூட்டி - பிரதான தேர்தல்கள் நடைபெறலாம் என்று கசிய விடப்பட்ட செய்திகளை ஆளும் தரப்பு மறுத்துள்ளது. ஆளும் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் இந்த மறுப்பைத் தெரிவித்திருக்கின்றார்.

ஆளும் தரப்பு இப்படி விழுந்தடித்துக் கொண்டு தேர்தல் மறுப்பு அறிவிப்பு வெளியிட்டமைக்குக் காரணம் உண்டு.

வழக்கமாக தேர்தல் நெருங்கும் சமயத்தில்தான் கட்சிகளின்அணி மாறல்கள், அணித் தாவல்கள், 'அந்தர் பல்டிகள்' எல்லாம் நடக்கும்.

2014 இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிய போது அப்படி பல அதிரடி அந்தர் பல்டிகளைச் சந்தித்த அனுபவம் ராஜபக்ஷக்களுக்குத் தாராளமாக உண்டு.

இப்போது ஆளும் தரப்பில் இருந்து பலர் அந்த அணிப் பக்கம் பாயலாம், இந்த அணிப் பக்கம் தாவலாம் என்ற செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அணி மாறல்கள், புதிய அணி உருவாக்கல், புதிய கூட்டை உருவாக்குதல் என்றெல்லாம் கொழும்பு அரசியல் சூடு பிடித்துள்ளது.

"எதற்கும் அவசரப்படாதீர்கள். எந்தத் தேர்தலும் இப்போதைக்கு நடவாது" - என்று செய்தி வெளியிட்டால், இந்த அணி மாறல்கள் - பாய்ச்சல்கள் - முயற்சிகள் அடியோடு அடங்கிப் போகும், சுமுகமாக ஆட்சியைத் தொடரலாம் என்று அரசுத் தலைமை கருதுகின்றது.

அதனால்தான் தேர்தல் இப்போது இல்லை என்ற தெளிவுபடுத்தல் அறிவிப்பு. 'சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?'

– மின்னல் –

---

## ஆயிரக்கணக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மக்களின் வருமானத்தை அழித்துள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை, முல்கிரிகல தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தியின் மித்தெனிய தலைமை அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழிற்சாலைகள் மூடப்படும் நிலை தொடரும் அதேவேளை இன்று எமது நாட்டுக்கு வரும் அந்நிய நேரடி முதலீடும் குறைந்துள்ளது. இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரசின் பதில் கொரோனாத் தொற்றே.

கொரோனா பேரழிவின் மத்தியிலும் எழுச்சி பெற்ற நாடுகள் இருப்பதை அரசு மறந்துவிட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிக்கு வந்தவுடனேயே தொழில் அதிபர்களுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் வரிச் சலுகை வழங்கிய அரசே இன்று ஏற்பட்ட இந்த பாரிய வீழ்ச்சிக்குப் பொறுப்பு.

ஏறக்குறைய அனைத்து சர்வதேச நிதி மதிப்பீடுகளிலிருந்தும் நாடு அதிக ஆபத்தில் இருக்கின்றது – என்றார்.

# இந்தியப் படகுகள் ஏலத்தில்; யாழ் மீனவர்கள் வரவேற்பாம்!



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜன. 25

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு எடுத்த முடிவு காலம் கடந்ததாக இருந்தாலும் அதனைத் தாங்கள் வரவேற்கின்றார்கள் என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

ஒரு சில நாட்டுப்படகுகளும் இதனுள் இருபக்கின்றன என அறிகிறோம். இலங்கையின் சட்டம் என்று வரும்போது நாட்டுப்படகு, விசைப்படகு என எல்லாம் ஒன்றுதான்.

இதனால் தமிழ்நாட்டில் உள்ள சாதாரண மீனவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை.

அரசியல்செல்வாக்குள்ளதமிழ்நாட்டு முதலாளிகளே இழுவைமடி தொழிலை இங்கு ஊக்குவிக்கின்றனர். அவர்களது படகுகளே இதனால் பாதிப்படையும்.

நேற்றைய தினமும் பருத்தித்துறை தொடக்கம் மருதங்கேணி வரையிலான பகுதிகளில் பல நூறு படகுகளில் இந்திய மீன்பிடி படகுகள் அத்துமீறி வந்தமையை அவதானிக்க முடிந்தது.

இதனால் உள்ளூர் மீனவர்கள் அச்சத்திலேயே தொழிலுக்குச் செல்லாமல் திரும்பி வந்து விட்டனர்.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுபவர்களை இலங்கை கடற்படை தொடர்ந்து கைது செய்ய வேண்டும்.– என்றார் அவர்.

# இராணுவப் புலனாய்வாளர்களின் தாக்குதலில் டிப்பர் சாரதி படுகாயம்



முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இராணுவப் புலனாய்வாளர்கள் வீதியால் சென்ற டிப்பரை வழிமறித்து டிப்பருக்குள் என்ன இருக்கின்றது எனக் கேட்டு சாரதி மீது கடும் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

இந்தச் சாரதி மீது இருப்புக் கம்பியால் அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளார்கள்.

கண் மற்றும் முதுகுப் பகுதிகளில் படுகாயமடைந்த சாரதி, புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைவேலி பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நவரத்தினம் உதயசீலன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# சாவகச்சேரி இந்துக்கு அருகில் ரயில் மோதி மாணவன் மரணம்



கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த உருத்திரா தேவி ரயிலுடன் மோதி மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

நேற்று மாலை 6.15 மணியளவில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் கொடிகாமத்தைச் சேர்ந்த உதயகுமார் பானுசன் (வயது 18) எனும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் சாவகச்சேரி இந் துக் கல்லூரிக்கு அருகில் ரயில் பாதையை நடந்து கடந்த வேளை யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதியதில் உயிரிழந்துள்ளான்.

இம் மாணவன் இன்று பாடசாலையில்நடைபெறும்சோர்சல்நிகழ்வுக்கு ஆடைகளைத் தைக்கச் சென்றபோதே இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளார்.




# சட்டவிரோதமான முறையில் அதிகாரத்தை கைப்பற்ற அரசு முயற்சி - ஜே.வி.பி. சாடல்

ஜனாதிபதியின் பதவிக் காலம் இரண்டு வருடங்கள் நீடிக்கப்பட வேண்டும் என சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றமையை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனைத் தெரிவித்தார்.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே அண்மையில் வெளியிட்ட கருத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றும் அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பேச வைத்து சோதித்து பார்க்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களில் பொதுமக்களுக்குச் சேவைசெய்ய முடியவில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்த கருத்து மூலம் தற்போதைய அரசாங்கம் பொதுமக்களுக்காக பணியாற்றத் தவறிவிட்டது என்பது தெளிவாகிறது எனக் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மாணவர்களுக்கான கல்வியை நாசமாக்கியுள்ளது என்றும் விவசாயிகளுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தியதோடு மரக்கறிகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உயர்த்தியது என்றும் குற்றம் சாட்டினார்.

தற்போதைய அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றவோ நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதிலோ வெற்றி பெறாத நிலையில் தற்போது தன்



னிச்சையாக அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறது என சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சாட்டினார்.

## இளைஞர் கடத்தப்பட்ட சம்பவம் ஹிருணிகா வழக்கு விசாரணைக்கு!

இளைஞர் ஒருவரை கடத்திய சம்பவம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிரான வழக்கு விசாரணை திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மேலும் குறித்த தினத்தில் முறைப்பாட்டாளரின் முதலாவது சாட்சியை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2015 டிசெம்பர் 21ஆம் திகதி, தெமட்டகொடை பகுதியில் வைத்து, ஹிருணிகாவின் மெய்ப் பாதுகாவலர்கள், அவருக்கு சொந்தமான டிபென்டர் வாகனத்தில் வைத்து இளைஞரை கடத்தினர்.

இதனை அடுத்து மெய்ப்பாதுகாவலர்கள் 8 பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், ஒத்தாசை புரிந்தார் எனக் ஹிருணிகா மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வானில் இருந்து மலர்களைத் தூவ பல லட்சம் ரூபா செலவிட்ட அரசு

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள தருணத்தில் அரசாங்கம், சமய நிகழ்வுகளுக்காக வானில் இருந்து மலர்களைத் தூவ கடந்த ஆண்டில் பல லட்சம் கணக்கான ரூபா பொது பணத்தை செலவிட்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

இப்படியான விமான பயணத்துக்காக ஒரு மணி நேரத்திற்கு 2 ஆயிரம் டொலர்கள் செலவாகும் என விமானப்படையின் பேச்சாளர் துான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக பயன்படுத்தப்படும் ஹெலியின் ரகத்துக்கு ஏற்ப செலவு முடிவு செய்யப்படும். பெல் 412 ரக ஹெலிக்கு ஒரு மணி நேரத்துக்கு 2 ஆயிரம் டொலர்கள் செலவாகும்.

பெல் 212 ரக ஹெலிக்குக் குறைவான தொகை செலவாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டில் சமய நிகழ்வுகளுக்காக இலங்கை விமானப்படை சுமார் ஆறுஹெலிகள் மூலம் மலர்களைத் தூவி உள்ளது. மலர்களைத் தூவுவதற்கான பணத்தை புத்தசாசன அமைச்சு விமானப் படைக்கு செலுத்தியுள்ளது.

சிவபூமி அரும்பொருட் காட்சிச்சாலை
Sivapoomi Jaffna Museum



இன்று மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எமது நிறுவனத்துக்கு ஆதரவு தந்துதவும் அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரும்பொருட்காட்சியகம் திறக்கும் நேரம் -
காலை 9.00 - மாலை 5.30 மணிவரை

சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
021 222 7938, 021 222 7944

சிவபூமி
அரும்பொருட் காட்சியகம்,
இல.50, கண்டி வீதி,
நாவற்குழி.
021 205 2585

## மின்சாரத்துறையை ஆக்கிரமித்த மாபியா!

### மைத்திரி குற்றச்சாட்டு

மின்சார துறையினர் பல ஆண்டுகளாக மாபியா ஒன்று செயற்பட்டு வருவதாகவும் மின்சார பிரச்சினை என்பது திடீரென வந்த பிரச்சினையல்ல எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



காலியில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மின்சார துறையின் தொழிற்நுட்ப பிரிவுகளில் பல ஆண்டுகளாக பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இந்த பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத துரதிஷ்டம் காரணமாகவே மக்கள் இருளில் இருக்க நேரிட்டுள்ளது.

மின்சார நெருக்கடி இல்லாத காலத்தில் தனியார் துறையினரிடம் இருந்து மின்சாரத்தை பெற பில்லியன் கணக்கில் பணம் செலவிடப்படுவது நாட்டு மக்களுக்குத் தெரியாது.

நீண்டகாலமாகத் தனியார் துறையினரிடம் இருந்து மின்சாரத்தைப் பெற பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டு வருகிறது. இருந்து வந்த பிரச்சினைகள் ஒன்றாக சேர்ந்து மோசமான நிலைமைக்கு வந்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி, நிலக்கரி பிரச்சினை, பொருளாதார நெருக்கடியுடன் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

தொழிற்நுட்ப மற்றும் அரசியல் தரப்பினர் இது சம்பந்தமாக பேச்சு நடத்தி, பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து மக்களுக்குத் தேவையான நிவாரணங்கள் மற்றும் நலன்புரி சேவைகளை வழங்குவது முக்கியமானது எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.




## மன்னார் மாவட்டத்தில் கனியவள மண் அகழ்வுக்கு எதிராக பல இடங்களில் விழிப்புணர்வு பதாதைகள்!

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோரப் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத கனிய வள மண் அகழ்வு மற்றும் ஆய்வுகளை உடனடியாக நிறுத்தக் கோரி 'மன்னாரின் சுற்றாடலைப் பாதுகாக்கும் அமைப்பின்' ஒழுங்கமைப்பில் பொது இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் கடற்கரையோரங்களில் காணப்படும் மணல்களில் மிகவும் விலை உயர்ந்த அரிதான 'தைத்தனியம்' எனும் கனிமம் அதிக அளவு காணப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த தைத்தனியத்தை அகழ்வு செய்யும் பணிகள் சட்டவிரோதமாக இடம் பெறுகின்றமையைத் தடுக்கக் கோரி குறித்த விழிப்புணர்வு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று குறித்த தைத்தனியம் அகழ்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் முதற் கட்டமாக மன்னாரில் பேசாலை, தலைமன்னார் உள்ளிட்ட பல பகுதிகளில் மணலுக்கு அடியில் பல மீற்றர்கள் குழி தோண்டப்பட்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவற்றை உடனடியாக நிறுத்தக் கோரி மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பினர் மும்மொழிகள் அடங்கிய குறித்த பதாகைகளைப் பிரதான பஸ் நிலையம், வைத்தியசாலை சந்தி, மடு சந்தி உட்பட பல பகுதிகளில் காட்சிப்படுத்தியுள்ளனர். மேற்படி காட்சிப்படுத்தப்பட்ட சில பாதைகள் சில இடங்களில் கனிய வள அகழ்வுடன் சம்பந்தப்பட்ட விசமிகளால் கிழிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கனலும் பேரினவாத வெறி

நாய் வாலை நிமிர்த்துவது என்பது சாத்தியப்படப் போவதில்லை. வளைந்த வால், வளைந்ததுதான்.

அது போலத்தான் பௌத்த – சிங்களப் பேரினவாதத்தில் மட்டுமே அரசியல் நடத்துவது என்ற ராஜபக்ஷக்களின் பரவணிப் பண்பியல்பும். அது மாறவே போவதில்லை என்பது தெளிவு.

2006 முதல் 2015 வரையான இருண்ட யுக ஆட்சியின் விளைவைப் புரிந்து கொண்டு, ஜனநாயக மீட்சிக்காக எழுச்சி கொண்டது இலங்கை. அதனால் ஓரங்கட்டப்பட்டு ஆட்சிக் கட்டிலிருந்து தூக்கி வீசப்பட்டனர் ராஜபக்ஷக்கள்.

மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற பேரினவாதக் கிளர்ச்சியே கைகொடுக்கும் என்பதைப் புரிந்து கொண்டு இனவாதத்தைக் கையில் எடுத்தனர் அவர்கள். நல்லாட்சி அரசின் கீழ் குறிப்பிடத்தக்களவுக்கு இனங்களுக்கு இடையில் கட்டியெழுப்பப்பட்ட நல்லிணக்கம், புரிந்துணர்வு, இன சௌஜன்யம் போன்ற யாவற்றையும் தம்முடைய பேரினவாத வெறிப் பிரசாரத்தின் மூலம் நிர்மூலமாக்கினர். அதனால் நாடு மீண்டும் இனக்குரோத நெருக்கடிக்குள் மூழ்கியுள்ளது.

பௌத்த, சிங்களவர்களுக்கு பேரினவாத வெறியூட்டி அந்த வாக்குகளில் மட்டும் ஜனாதிபதியானார் கோட்டாபய ராஜபக்ஷ.

அதன் பின்னர் தெரிவான அவரது அரசும் அதே வழியைப் பின் தொடர்ந்தது.

ராஜபக்ஷக்களின் கொடுங்கோல் ஆட்சி முறைமையின் கீழ் நாட்டின் பொருளாதாரமும் சீரழிந்து நாடு மீள முடியாத இக்கட்டில் சிக்கிக் கொண்டுள்ளது.

இப்போது பக்கத்து நாடான இந்தியா உட்பட்ட தேசங்களின் நன்கொடைகள், அன்பளிப்புகள், கடன் உதவிகள் என்பவற்றின் மூலமே நாட்டைக் கொண்டிழுக்க முடியும் என்ற யதார்த்தப் புற நிலை கருதி ராஜபக்ஷக்கள் தங்கள் பேரினவெறிப்போக்கை சற்று அடக்கி வாசிக்கின்றார்கள். நாட்டின் சிறுபான்மையினரையும், அவர்களது உரித்துக்களையும் மதித்து நடப்பது போல காட்டினால் மட்டுமே சர்வதேச உதவி, ஒத்தாசைகள் இந்தச் சமயத்தில் கிட்டும் என்ற யதார்த்தம் கருதி பேரினவாதப் போக்கை சற்று அமுக்கி வாசிக்கின்றார்கள். ஆனால் அது எத்தனை நாளைக்கு என்பதுதான் கேள்வி.

சில தினங்களுக்கு முன்னர், மகா சங்கத்தினரைச் சந்தித்த ஜனாதிபதி அங்கும் தனது பேரினவாதப் புறணியை முழு வீச்சில் ஒப்புவிக்கத் தவறவில்லை என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

“பௌத்த, சிங்கள மக்களே என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தார்கள். ஆகவே நான் அவர்களைக் கைவிடவும்  மாட்டேன், மறக்கவும் மாட்டேன். அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வது எனது பிரதான கடமை” – என்ற சாரப்பட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கு கருத்துத் தெரிவித்தார் எனத் தெரிகின்றது.

அவரது அந்தக் கூற்றின் அடிப்படையிலேயே அவர் மீது முழு நம்பிக்கை வைக்கும் தீர்மானத்தை மகா சங்கம் எடுத்து அறிவித்தது என்றும் கூறப்பட்டது.

அடுத்த மாதத்தில் ஜெனிவாவில் கூடப் போகின்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக சர்வதேசம் – குறிப்பாக மேற்குலகம் – கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும், அதனால் சர்வதேச இராஜதந்திர நெருக்குதல்கள் ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டுள்ள ராஜபக்ஷக்களின் கொழும்பு அரசு, அதனால் சில விடயங்களைத் தற்போதைக்கு வெளிப்பார்வைக்கு தந்திரமாக அமுக்கி வாசிக்கின்றது. ஆனால் உள்ளூற அதன் பேரினவாத வெறிப் போக்குச் செயற்பாடு கனன்று கொண்டுதான் இருக்கின்றது. ஜெனிவா கூட்டத் தொடர் முடிய அது மீண்டும் விளாசி எரியும் என எதிர்பார்க்கலாம்.

# ஒரு வரலாறாக எமது இறப்பு இருக்கவேண்டும்!

## ஏ.ஏ.நவரெட்ணம் அடிகளார் தெரிவிப்பு





இந்த உலகத்தின் நாம் பிறப்பது ஒரு சம்பவமாக விருந்தாலும் நாம் இறப்பது ஒரு வரலாறாக இருக்கவேண்டும் எனக் கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் அருட்தந்தை ஏ.ஏ.நவரெட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கலாவித்தகர் ஸ்ரீமதி வசந்தி நேருவின் நிருத்திய கலாலய நாட்டியப்பள்ளியின் கின்னஸ் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. மட்டக்களப்பு, கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிர்வகத்தின் இராசதுரை அரங்கில் கலாவித்தகர் திருமதி வசந்தி நேருவின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

2021ஆம் ஆண்டு மதுரையைச் சேர்ந்த நாட்டிய கலாமணி முரளிதரனால் நடத்தப்பட்ட நிகழ்நிலை தொழில்நுட்பத்தின் ஊடாக சுமார் 700 மாணவர்கள் கலந்துகொண்ட தமிழ் வர்ணம் நாட்டிய நிகழ்வு நடத்தப்பட்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்டது.

இந்த கின்னஸ் சாதனை நாட்டிய நிகழ்வில் நிருத்திய கலாலய நாட்டியப்பள்ளியின் 16 மாணவிகள் கலந்து கொண்டு சாதனைக்குச் சொந்தக்காரர்களாகினர்.

இந்த நிகழ்வில் அதிதிகளாகச் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஓய்வு நிலை அதிபர் திருமதி கலாரட்னா ஆர்.தட்சணாமூர்த்தி, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட ஓய்வுநிலை பேராசிரியர் எம்.செல்வராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கலைத்துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கிவரும் நடனத்துறை விரிவுரையாளர்கள்,ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் கின்னஸ் சாதனை படைத்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின்போது நிருத்திய கலாலய நாட்டியப்பள்ளி மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கிங்ஸ்டனில் ‘இங்கிலாந்தில் ஒரு யாழ்ப்பாணம்’ பெயர்ப் பலகைத் திறப்பும் பொங்கல் நிகழ்வும்!






ஈழத்தமிழர்களின் கலாசார நகரான யாழ்ப்பாணம் பிரித்தானியாவின் லண்டன் பெருநகர பிராந்தியத்தில் ஒன்றான, தேம்ஸ் ஆற்றின் மீதுள்ள கிங்ஸ்ரன் நகரத்துடன் இணைக்கப்பட்டதை வெளிப்படுத்தும் அறிவிப்புப் பலகை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படடது.

குறித்த நிகழ்வு, தமிழ்க் கலாசார மாதமாக ஜனவரியை கொண்டாடும் மாபெரும் பொங்கல் நிகழ்வும் லண்டனில் இடம்பெற்றது.

தமிழ்மொழியையும் அதன் கலை கலாசார பண்பாடுகளையும் பிரித்தானியாவிலும் கொண்டாடும் வண்ணம் கடந்த டிசெம்பர் (2021) மாதம் பிரித்தானிய பெரு நகர அவை ஜனவரி மாதத்தை பிரித்தானியாவில் தமிழர் பாரம்பரிய மாதமாகப் பிரகடனப்படுத்தியது.

அதன் பிரகாரம், பிரித்தானியாவில் இம் மாதம் தமிழர் மரபுரிமை திங்கள் பிரித்தானிய நாடாளுமன்றம் உட்படப் பல இடங்களில் கொண்டாடப்பட்டு வந்தது.

இந்த வகையில் பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவம் மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் மற்றும் தமிழ் பாடசாலைகள் இணைந்து நடத்திய மாபெரும் தமிழர் மரபுத் திங்கள் கலாசார பேரணியும் பொங்கல் விழாவும் லண்டன் கிங்ஸ்ரன் பகுதியில் உள்ள நகரமான நியூ மோல்டனில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ஆரம்ப பிரதான நிகழ்வாக கிங்ஸ்டன் நகரப் பெயர்ப்பலகையில் யாழ்ப்பாண நகரத்தின் பெயரும் இணைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

இரு நகரங்கள் இணைவுத்திட்ட அடிப்படையில் லண்டனின் கிங்ஸ்ரன் அப்பொன் தேம்ஸ் நகரம் இலங்கையின் யாழ்ப்பாண நகரைக் கடந்த 2016 ஆம் ஆண்டு தனது இரட்டையராக ஏற்றுக்கொண்டது. இதற்கான ஒப்பந்தத்தை அப்போதைய வட மாகாண முதலமைச்சராக இருந்த தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் மேற்கொண்டிருந்தார். இந்நிலையிலேயே லண்டன் கிங்ஸ்ரன் நகரப் பெயர்ப் பலகையுடன் யாழ்ப்பாணத்தின் பெயரையும் இணைத்து ’ கிஙஸ்டன் யாழ்ப்பாணத்துடன் இரட்டையர்’ என்ற பெயர் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

தமிழர்களின் மங்கள வாத்தியங்களான தவில் நாதஸ்வரம் மற்றும் பறை வாத்திய இசைகள் முழங்கள் வண்ண நிற பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டமையைத் தொடர்ந்து, பிரித்தானியத் தாராளவாத ஜனநாயக கட்சித் தலைவரும்  நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சேர் எட்டேவி ; குறித்த பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார். கிங்ஸ்டன் நகரபிதா உட்படப் பல சிறப்பு விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, அங்கிருந்து தமிழரின் வீர முரசான பறை இசை முழங்க, தமிழர் பாரம்பரிய கலைகளான குதிரையாட்டம், கோலாட்டம், மயிலாட்டம், கும்மி, காவடி, கரகம், சிலம்பம் என்பவற்றின் வண்ண அணி வகுப்புடன் பொங்கல் நடைபெற்ற சதுக்கம் நோக்கி கலாசார பேரணி மிகச்சிறப்பாகப் பிரதான வீதி வழியாக நகர்ந்து சென்றது.

அங்கு பொங்கல் விழாவும் தமிழர் கலை கலாசார நிகழ்வுகளும் நடத்திக் காண்பிக்கப்பட்டன. குறிப்பாக, அருகிவரும் தமிழர் வீரக்கலைகளான கம்பு, சிலம்பாட்டம், களரி, அடிமுறை உட்பட்ட மிக அரிய தமிழர் வீரக்கலைகள் செய்து காண்பிக்கப்பட்டன. பனை உற்பத்திப் பொருள்கள் மற்றும் தமிழர் பாரம்பரிய வரலாற்று நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

அனைவருக்கும் பொங்கல் பிரசாதங்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்களின் பேச்சுக்கள் இடம்பெற்றன. தொடர்ந்து, அருகில் உள்ள மண்டபத்தில் தமிழர் வரலாறு பற்றிய கண்காட்சி இடம்பெற்றது.

அரிய புகைப்படங்கள், தமிழர் பாவனை பொருள்கள், இசைக்கருவிகள், பாரம்பரிய உணவுகள் எனப் பல பொருள்கள் காண்பிக்கப்பட்டன.

அத்துடன், கிராமிய நடனங்கள், நாட்டுக் கூத்து மற்றும் உடுக்கு கச்சேரி உட்பட்ட பல உள்ளக நிகழ்வுகளும் இடம்பெற்றன. கடும் குளிர் மற்றும் கொவிட் அச்சத்தின் மத்தியிலும் பலநூற்றுக்கணக்கில் மக்கள் பெரு வெள்ளமாகத் திரண்டு கண்டுகளித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் வெளிநாடுகளில் அந்த அமைப்பு செயற்படுகிறது

## ஜயநாத் கொலம்பகே தெரிவிக்கிறது



தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை மண்ணில் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் வெளிநாடுகளில் அந்த அமைப்பு செயற்படுகின்றது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அவர்களின் ஆயுதங்கள் இனித் தற்கொலை குண்டுகள் மற்றும் பீரங்கிகள் அல்ல என்றும் பிரசாரங்களும் நீதிமன்ற நடவடிக்கைகளுமே தற்போது அவர்களின் ஆயுதம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் அவர்களின் குறிக்கோள் அப்படியே உள்ளதென்றும் விடுதலைப்புலிகளின் ஈழக்கொள்கை மாறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் வழங்கியுள்ள நேர் காணலில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் 'இலங்கை பொறுப்புக்கூறல் திட்டம்' தொடர்பான அறிக்கை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இந்த விடயம் தொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக பயங்கரவாதத்துக்கு எதிராக போரிட்ட போதிலும், இந்த நாட்டில் பெரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்பதே தங்கள் நிலைப்பாடு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2008 இல் எபபிஐஆல் பிரகடனப்படுத்தப்பட்ட உலகின் மிகவும் இரக்கமற்ற பயங்கரவாத அமைப்பிற்கு எதிராக இலங்கை போராடுகிறது என்றும் பிரச்சினைகள் அல்லது மீறல்கள் இருந்தால் இலங்கை உள்ளூர் பொறிமுறைகள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் 16 குற்றவாளிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார் என்றும் மற்றவர்களை விடுவிப்பது தொடர்பாக ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்க ஜனாதிபதி மற்றொரு குழுவையும் நியமித்தார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பின்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 பேர் கொண்ட மற்றொரு குழு விடுவிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சட்டத்தையும் ஒழுங்கையும் மேம்படுத்தும் அதே வேளையில், பொறுப்புக்கூறல், காணாமல் போனோர், பாதுகாப்புப் படையினரின் வசமுள்ள காணிகளை விடுவித்தல், நல்லிணக்க முயற்சிகள் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் போன்ற பிரச்சினைகளை உள்நாட்டில் தாங்கள் பேசி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் உத்தரவாதத்தை வழங்க முடியாது

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறையில் நடைமுறைப்படுத்த தவறியமையே தற்போதைய நிலைமைக்கு காரணம் எனக் கூறினார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், மின்சார உற்பத்திக்கு எரிபொருள் வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கூறியுள்ளார். இருப்பினும் தொடர்ந்தும் மின்சாரம் வழங்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை வழங்க முடியாது என மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தற்போதைய நிலைமைக்கு எவரையும் குறைகூற முடியாது என்றும் இந்த விடயம் தொடர்பான வேலைத்திட்டத்தை வகுக்கத் தவறியதன் விளைவே இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 70 சதவீதமாக அதிகரிக்கப்படும் என அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதாக அமைச்சர் அமரவீர தெரிவித்தார்.

# 14 வீடுகள் கொண்ட தொடர் லயன் குடியிருப்பில் திடீர்த் தீ!



டயகம பொலிஸ் பிரிவிற்குட்டபட்ட வேவர்லி தோட்டம் ஆடலி பிரிவில் குடியிருப்பில் நேற்று (திங்கட்கிழமை) காலை 7.30 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 14 வீடுகள் கொண்ட தொடர் லயக்குடியிருப்பில் ஒரு வீட்டிற்குள் ஏற்பட்ட தீயால் குறித்த வீடு முற்றாக எரிந்துள்ளது. இதனால் இந்த வீட்டில் இருந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதையடுத்து, அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்குத் தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் எனப் பெருமளவிலான பொருள்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை, இது தொடர்பாக டயகம பொலிஸ் நிலையத்துக்கும், தோட்ட நிர்வாகத்துக்கும் பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருகின்றமையோடு, தோட்ட நிர்வாகம் இவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றது.

# கொவிட்டுக்குள்ளாகி குழந்தைகளும் வைத்தியசாலைகளில் நிரம்பி வழியல்!

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் குழந்தைகளின் விகிதம் கடுமையாக உயர்ந்துள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்துள்ளது.

அனைத்து வயதினரிடையேயும் கொரோனா தொற்று விகிதம் வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய ஊடகமொன்றுக்கு தெரிவித்தார்.

பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களிடம் இருந்து குழந்தைகளுக்கு வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதை சுட்டிக்காட்டிய அவர், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தற்போது கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் கணிசமான எண்ணிக்கையில் உள்நாட்டிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் 50 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் சிகிச்சையைப் பெறுகின்றனர் என்றும் அதேநேரத்தில் சுமார் 10 முதல் 15 கொரோனா தொற்றுக்குள்ளான சிறுவர்கள் தினசரி சிகிச்சைக்காக சேர்க்கப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பெப்ரவரி நடுப்பகுதியில் நிலைமை மேலும் மோசமடையக்கூடும் என்று சுட்டிக்காட்டிய அவர், 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும் 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் முடிந்தவரை விரைவாக பூஸ்டர் டோஸ்களைப் பெறுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

# பாடசாலைகளில் அதிகரிக்கும் கொரோனா பரவல் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை!

நாட்டில் உள்ள பாடசாலைகளில் அதிகளவான கொரோனாத் நோயாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர் எனப் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, மூடப்பட்ட இடங்கள் மற்றும் சிறிய வகுப்பறைகளில் உள்ள பாடசாலை மாணவர்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவரான உபுல் றோஹன தெரிவித்தார்.

புத்தளத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிறைய மாணவர்கள் மற்றும் போதிய இடவசதி இல்லாத வகுப்பறைகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் அடையளாம் காணப்படுகின்றனர் என்றும் இது கொத்தணிகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக அவதானமாக இருந்தால் இவ்வாறான நிலைமையை ஓரளவு தவிர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டின் சகல பிரஜைகளுக்கும் டிஜிற்றல் பணப்பை மென்பொருள்



டிஜிற்றல் தேசிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் நாட்டின் சகல பிரஜைகளுக்கும் டிஜிற்றல் பணப்பை மென்பொருளை அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளதாக இளைஞர் விவகார அமைச்சரும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசி மூலம் பணத்தை செலுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட லங்கா கியுஆர் குறியீட்டை கம்பஹாவில் மக்கள் மயப்படுத்தும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் அவ்வாறு குறிப்பிட்டார்.

கடவுச்சீட்டு, பிறப்பு, விவாகச் சான்றிதழ்கள், பரீட்சைப் பெறுபேறுகள் உட்பட அத்தியாவசிய தனிப்பட்ட ஆவணங்களை தமது கைத்தொலைபேசியில் களஞ்சியப்படுத்துவதற்கான டிஜிற்றல் கட்டமைப்பு வசதி இதன் மூலம் கிடைக்கும்.

தேவையான சந்தர்ப்பங்களில் எந்தவொரு சிக்கலும் இன்றி உரிய ஆவணங்களை டிஜிற்றல் முறையின் கைத்தொலைபேசி ஊடாக வழங்கும் வாய்ப்பு சகல பிரஜைகளுக்கும் கிடைக்கும் எனவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 262**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**669.தமிழ் மக்களிடையே இன்று தலைமைத்துவம் இருக்கிறதா?**

அது உள்ளதா என்று மக்களுக்கே தெரியும். தேசியப் பரப்பில் ஒன்றாக இருந்தவர்கள், இன்று பலவாகி, இந்தியப் பிரமர் மோடிக்கு கொடுக்க முன்னெடுக்கப்பட்ட ஆவணத்தின் போக்குகளை சற்று அவதானித்தால் - அதற்கிடையே வீசப்பட்ட சொற்தொடர்களையும் கருத்துக்களையும் கவனித்தால் - தலைமைகளின் தத்துவங்களை விளங்கிக் கொள்ளலாம்.

இருக்கும் பானையிலும் அரிசியிலும் தானே பொங்கலாம்.

சர்வதேசத்தில் இருந்த விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்கள் போராட்டம் ஜனநாயக வழியில் தொடரும், தாங்களே தொடர்ந்தும் அந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என அறிவித்தல்கள் தந்தார்கள்.

அதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாட்டிலும் ஜனநாயக வழியில் போராட்டத்தை முன்னெடுக்க ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், கனடிய தமிழ் காங்கிரஸ் என்று அமைப்புகள் உருவாகின. ஆனால் போராட்ட காலத்தில் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்தவர்கள் அனுசரணையாக


கே.பி.

இருந்தவர்களுக்குள்ளேயே பிரிவினைகளால் கே.பியின் நிலை தள்ளாடி, அவர் அரசாங்கத்தின் அதிதியானார். உருத்திரகுமாரன் தலைமையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தோன்றியது. அதைவிட இவையிடையே ஊசலாடிய விடுதலை புலிகளின் உறுப்பினர்களின் குழுக்கள் தோன்றின. தாங்கள் சர்வதேசத்தில் ஒருங்கிணைப்புக் குழுவை நடத்துகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதை விட அவர்களுடன் அனுசரணையாகவிருந்த வணபிதா எஸ்.ஜே.இம்மானுவேல் எழுதிய தனது நூலில் –

“இப்புதிய கட்டத்திற்கு இன்று வரைக்கும் நடந்தேறியவற்றைத் தெளிவான பார்வையிலும் முதிர்ச்சியான முறையிலும் உள்வாங்கி மீளாய்வு செய்வதும், அதனூடாக இலட்சியத் தெளிவையும் ஆன்மீக பலத்தையும் பெற்றுக்கொள்வதும் இன்றியமையாதது. வெற்றிகளினூடாகப் பெற்றுக் கொண்ட பலத்தை இழக்காது காப்பதும், நடந்தேறிய தவறுகளை நேர்மையாகவும் துணிவாகவும் இனங்கண்டு திருத்திக் கொள்வதும் எமது போராட்டத்தின் புதிய கட்டத்திற்கும் முன்னேற்றத்திற்கும் மிக மிக முக்கியமானவை.

“இக்கட்டத்தில் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழீழத்தின் மூத்த, இளைய சந்ததியினர் சேர்ந்து போராட அழைக்கப்படுகின்றனர். மேலும் புதிய சவால்களையும் சந்தர்ப்பங்களையும் அவரவர்க்குரிய திறமைகளோடு பயன்படுத்தி தூய உள்ளத்துடனும் துணிவுடனும்


உருத்திரகுமாரன்

பங்கெடுக்க நாம் எல்லோரும் அழைக்கப்படுகிறோம்” – என்று தனது முன்னுரையில் குறிப்பிட்டார்.

இந்த நூலுக்கு அணிந்துரை தந்த காசி ஆனந்தன் ‘வண இம்மானுவேல் அடிகளார் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனித்து நிற்பவர். அவர் ஒரு வரல்லர். அவர் ஓர் இயக்கம். எரிமலை கூட ஓய்வெடுக்கும். வண இம்மானுவேல் அடிகளார் ஓயாத எரிமலை .

“தமிழீழ மண்ணின் கண்ணீரை – பெருமூச்சை – செங்குருதியை – உயிர்த் துடிப்பை – தமிழீழ மக்களின் விடுதலைக்கான தேவையை - அடிகளார் பதிவு செய்துள்ளார். ஆழமிக்க அவர் எழுத்துக்களில் ஈழ மக்களின் முழக்கம் கேட்கிறேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியை தவத்திரு அடிகளார் தமிழ் உறுதி செய்கிறது.” – என்றார் காசி ஆனந்தன்.

முள்ளிவாய்க்காலோடு எல்லாம் முடிந்தது என்று மூலை முடுக்குகளில் எழும்


மங்கள சமரவீர

முனகல்களுக்கு வண. இம்மானுவேல் அடிகளார் முற்றுப்புள்ளி வைக்கிறார் எனவும், 2009 பெப்ரவரி 24 அமெரிக்காவின் கிழக்கு, தெற்கு ஆசிய நிகழ்வுகளுக்கான பொறுப்பாளர் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பாப் கோபியின் அறிக்கை ஒன்றில் தெரிவித்ததை காசி ஆனந்தன் பதிவு செய்தார். அது –

‘புலிகளுடனான சண்டை முடிந்து, தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்கப்படாமல் அவர்கள் மீண்டும் ஒதுக்கப்படுவார்களேயானால் விடுதலைப் புலிகள் மீண்டும் ஆயுதங்களைக் கையில் ஏந்துவார்கள்’ – என்பது.

முள்ளிவாய்க்கால் முடிந்து 13 ஆண்டுகளாகி விட்டன. விடுதலைப் புலிகளின் மீதான தடை சர்வதேசத்தால் – இந்தியா உட்பட – மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வருடா வருடம் அரசின் நாடாளுமன்ற தொடர்களை நடத்தி அறிக்கைகள் தருகிறார்.

வணபிதா இம்மானுவேல் உலகளாவிய தமிழ் அமைப்பின் (Global Tamil Forum) தலைவராகினார். அன்றைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அனுசரணைகளோடு நல்லாட்சி அரசாங்கம் அமைவதில் முக்கிய பங்கேற்ற உந்தல்களால் அவர் மேலிருந்த தடைகள் நீக்கப்பட்டு, நாடு திரும்ப, நல்லாட்சியும் எவ்வித நற்பயனும் இன்றி


காசி ஆனந்தன்

நலிவதைக் கண்டார். அரசியலில் இருந்து விலகி, ஆன்மீகத்தில் முழுமையாக ஈடுபடுகிறார் எனவும், உலகளாவிய தமிழ் அமைப்பின் நடவடிக்கைகளில் இருந்து விலகி விட்டார் எனவும் அறிவித்தார்.

இடையே காசி ஆனந்தனோ தமிழ் நாட்டில் அங்குள்ள சில தலைவர்களுடனும் அமைப்புக்களுடனும் வட்டுக்கோட்டை தீர்மானம் - இரண்டாவதை நிறைவேற்றி இந்தியா தமிழர்களுக்கு நீதிபெற்றுத் தரவேண்டும் என்று சமர்ப்பணங்கள் வைத்தார்.


பிதா இமானுவல்

சுமந்திரன் தன்னோடு அழைத்துச் சென்ற குழு, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் பேச்சுக்கள் நடத்தியது. அதைத் தொடர்ந்து கனடிய தமிழ் அமைப்பினர் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசும்போது குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டார். லண்டனுக்குச் சென்றவர் பொதுக் கூட்டம் ஒன்றிலும் பங்கு பற்றாது அரசுடனான சந்திப்புக்கள் நடத்தி நாடு திரும்ப, இந்திய பிரதமருக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணத்தின் பிரச்சினைகளில் பலமாகப் பேசப்பட்டார்.

இந்திய பாதுகாப்பின் புலனாய்வுப் பிரிவு, விடுதலைப் புலிகளின் மீளாக்கத்துக்காக ஆயுதங்கள் நடத்தியவர்கள் கடற்பரப்பில் பிடிக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று செய்திகள் தருகிறார்கள்.

புலம்பெயர் தமிழர்களின் மத்தியில் ஆழமான, பரந்த ஆதரவு பெறாத சுரேன் சுரேந்திரன் உலகளாவிய தமிழ் அமைப்பின் தலைவராக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சுவார்த்தைகளில் சுமந்திரனின் குழுவுடன் ஈடுபட்டார் என்பதில் பலத்த அபிப்பிராய பேதங்கள் எழுப்பப்படுகின்றன.

அப்படியானால் தமிழ் மக்களின் தலைமை எங்கேயிருக்கிறது? அன்றில் இந்த தலையாட்டி பொம்மலாட்டிகளின் கயிறுகள் யார் கைகளில் உள்ளன?

இவைவிளங்கினால்தான் தலைமைத்துவத்தின் தத்துவத்தை அறியலாம்.

(வளரும்)



# எனது காலத்தில் ஒப்பமிட்ட வர்த்தமானிகள் பல இடங்களிலும் நடைமுறைப் படுத்தப்படவில்லை

## மைத்திரி கூறுகிறார்



ஜனாதிபதியாக தாம் பதவி வகித்த காலப்பகுதியில் கையொப்பமிட்ட பல வர்த்தமானி அறிவித்தல்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நடப்பு அரசாங்கம் மணல் மற்றும் மண் அகழ்வுக்கான அனுமதி பத்திரத்தைத் தடை செய்துள்ளமை தமக்கு வியப்பை அளித்துள்ளது.

அத்துடன் தாம் ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் 65 வர்த்தமானி அறிவித்தல்களில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மின் கட்டமைப்பைப் புனரமைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்ட நிலையில், அதனை சிலர் விமர்சித்தமை மாத்திரமின்றி நகைப்புக்குள்ளாக்கினர்.

அனைத்து வர்த்தமானி அறிவித்தல்களையும் நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று மின் விநியோகத் தடை தொடர்பில் நாம் கவலையடையத் தேவையில்லை என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

## நீர்வேலியில் மாணவர்களை மோதி தப்பியோடிய வாகனம்

பாடசாலைக்கு சென்ற மாணவர்கள் மீது மோதி விபத்துக்கு உள்ளாகிய தனியார் பஸ் ஒன்று அந்த இடத்திலிருந்து தப்பி சென்றுள்ளது. குறித்த விபத்தில் இரண்டு மாணவர்கள் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலி பூதவராயர் மடம் பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) காலை 07 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

குடும்ப பெண் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் தனது பிள்ளை உள்ளிட்ட இருவரை பாடசாலைக்கு அழைத்துச் சென்றவேளை, பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பஸ் (மினி வான்) அவர்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்த மாணவர்கள் இருவரும், அவர்களை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற குடும்ப பெண்ணும் காயங்களுக்கு உள்ளான நிலையில், அங்கிருந்தவர்கள் மீட்டு கோப்பாய் வைத்தியசாலையில் சேர்த்தனர். கோப்பாய் வைத்திய சாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.

## அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் குளிரூட்டி பாவனைக்கு தடைவரும்!

### அரச தகவல் திணைக்களம் அறிவிப்பு

இலங்கையில் அலுவலகங்கள், வீடுகளில் குளிரூட்டி பயன்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின் தடையின்றி மின் பாவனையை குறைப்பதற்கான யோசனையை அடுத்த அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குளிரூட்டி பயன்பாட்டை நிறுத்துதல், அலுவலகங்களில் மின்சாதனங்களை அணைத்தல் உள்ளிட்ட ஆலோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் பிரதான வீதிகளில் விளக்குகளை அணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அடுத்த இரண்டு நாள்களுக்கு மின் வெட்டு நடை முறைப்படுத்துவதற்கும் யோசனைகள் உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பஸ் பயணிகளுக்கு புதிய கட்டண முறை

### விரைவில் அறிமுகம் என்கிறார் திலும் அமுனுகம



எதிர்காலத்தில் பஸ் பயணிகளுக்காக புதிய கட்டண முறைமை அறிமுகப்படுத்த வேண்டி ஏற்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பஸ் ஊழியர்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் இந்த கட்டண முறைமை அறிமுகப்படுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆசனங்கள் தொடர்பான சட்டங்களை மீறும் பஸ்களை கையகப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு நான் எழுத்துமூலமாக அறிவித்துள்ளேன்.

பெரும்பாலான இடங்களில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிராமப்புற வீதிகளில் இந்த சட்டம் பெரும்பாலும் மீறப்படுவதாகத் தெரியவருகிறது.

இதனை நிறுத்தாவிடின் எதிர்வரும் வாரமாகும் போது, பஸ்களில் நின்றவாறு பயணிப்பதற்கு வேறு கட்டணங்களை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு, பஸ் ஊழியர்கள் தொடர்பில் சிந்தித்து கட்டண அதிகரிப்பை வழங்கினோம். அவ்வாறாயின் அவர்கள் எமது நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும்.

இல்லையாயின், பழைய கட்டணத்தை அமுலாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். பஸ்களில் நின்று பயணிப்பவர்களைப் போன்றே அமர்ந்து பயணிப்பவர்களும் பழைய கட்டணத்தைச் செலுத்தலாம்.

மீண்டும் அவர்கள் எம்மிடம் வந்து கட்டணத்தை மாற்றக் கோரினால், நாம் அதனை மேற்கொள்ளமாட்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பானின் உதவியை இலங்கை நாடவுள்ளது

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

சர்வதேச ரீதியில் இலங்கை எதிர்நோக்கும் சில பிரச்சினைகளைத் தீர்க்க ஜப்பானின் உதவியை நாடவுள்ளது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜப்பானிய தூதரகத்துடன் கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் பார்வையை மற்ற நாடுகளுக்கு முன்வைப்பதிலும் விளக்கமளிப்பதிலும் ஜப்பான் ஏற்கனவே அதன் பங்கைக் ஆற்றியுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பானிய கலாசாரம் காட்டும் பச்சாதாபம், இரக்கம், மென்மை மற்றும் ஒருமித்த கருத்து ஆகியவற்றின் காரணமாக ஜப்பான் அதைச் செய்யத் தகுதி பெற்றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சர்ச்சைக்குரிய பண்டோரா பேப்பர்ஸ் ரஞ்சனிடமும் வாக்குமூலம் பெறப்படும்



சர்ச்சைக்குரிய பண்டோரா பேப்பர்ஸ் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க விடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது.

குறித்த பண்டோரா பேப்பர்ஸ் வெளிப்படுத்தல்கள் தொடர்பில் வாக்குமூலம் வழங்க, சிறையிலிருந்து ரஞ்சன் ராமநாயக்க முன் வைத்த கோரிக்கைக்கு அமைய இந்த சாட்சியம் பெறப்படவுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த சாட்சியத்தை, சத்தியக் கடதாசியாக தனது சட்டத்தரணி ஊடாக சமர்ப்பிக்குமாறு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அறிவித்துள்ளதாக அந்த ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் ரஞ்சன் ராமநாயக்கவின் சத்தியக் கடதாசி சாட்சியம் கிடைத்த பின்னர் அதில் உள்ளடக்கப்படும் விடயங்கள் மீதும் விசாரணையாளர்கள் அவதானம் செலுத்துவர் என அந்த பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரத்தில் தற்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உறவினரான முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, அவரது கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோரிடம் மட்டுமே வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

திருக்குமார் நடேசனின் வங்கி நடவடிக்கைகள் தொடர்பில் உள்நாட்டு தனியார் மற்றும் அரச வங்கிகளிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் தேசிய இறைவரித் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் பெற்றுக் கொண்ட ஆவணங்கள் தொடர்பிலான பகுப்பாய்வு நடவடிக்கைகள் தொடர்வதாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுத் தகவல்கள் தெரிவித்தன.

பண்டோரா பேப்பர்ஸில் தமது பெயர் வெளியாகியமை தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்துமாறு முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன்படியே விசாரணைகளை முன்னெடுக்க கடந்த 2021 ஒக்ரோபர் 6 ஆம் திகதி ஜனாதிபதி உத்தரவிட்ட நிலையில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணைப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நுவன் அசங்க விதானகேயின் நேரடி கட்டுப்பாட்டில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் பண கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பிலான தகவல்கள் பண்டோரா பேப்பர்ஸில் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது நாட்டில் பெரும் பேசு பொருளாக மாறியமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 210 பேர் பூரண குணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 210 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (திங்கட்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 76 ஆயிரத்து 324 ஆக அதிகரித்துள்ளன.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 6 லட்சத்து ஆயிரத்து 886 ஆக பதிவாகியுள்ளன.

மேலும் இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றால் 15 ஆயிரத்து 299 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்ய விண்ணப்பம்

புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் இந்த விடயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது 79 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தற்போது சட்ட சிக்கல்கள் உள்ள பதிவு செய்யப்பட்ட 06 கட்சிகள் செயலற்ற அரசியல் கட்சிகளாகக் கருதப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பதிவு செய்ய சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து மூன்று அரசியல் கட்சிகளை பதிவு செய்ய தேர்தல்கள் ஆணைக்குழு சமீபத்தில் முடிவு செய்தது.

அதன்படி தமிழ் மக்கள் கூட்டணி, புதிய லங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி என்பன பதிவு செய்யப்பட்டன.

# அரசை அமைக்க முன்னர் என்ன செய்யவேண்டும்?

## பொன்சேகா விளக்கம்



கடந்த காலத்தில் செய்த தவறுகளை அடையாளம் கண்டு அதற்கு தீர்வு காணும் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்கு வந்த பின்னர் அதே பழைய பாரம்பரிய அரசியல் பயணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஈடுபட்டால் மக்களுக்கு நம்பிக்கை இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததுடன் டொலரின் பெறுமதி சுமார் 30 ரூபாவால் அதிகரித்ததாக அவர் தெரிவித்தார்.

ஆகவே நாட்டின் வறுமையை நோக்கிய பயணத்திற்கு முன்னாள் அரசாங்கமும் பொறுப்பு என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

எனவே எதிர்க்கட்சிகள் தற்போதைய நிலைமையை புரிந்து கொண்டு பின்னடைவுகளை சரிசெய்து கொண்டு முன்னேற வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார்.

இந்த விடயங்களை தீர்க்காமல் அரசாங்கத்தை அமைத்தால், ஐந்து வருடங்களில் அரசாங்கம் கவிழும் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு:

# உலகில் சுற்றுலாவுக்குப் பொருத்தமான 5 நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கம்

சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்போது வெகுவாக அதிகரித்துள்ளன என சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பாரிய பின்புலமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உலகில் சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதற்குப் பொருத்தமான ஐந்து நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தடுப்பூசி விடயத்தில் இலங்கை பெரும்பாலும் முன்னணியில் காணப்படுகின்றதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# எந்த துறையை எடுத்து கொண்டாலும் சரி ஈழ தமிழ் இளையோர்கள் எவருக்குமே சளைத்தவர்கள் அல்லர்

## அரியாலையில் வேலன் சுவாமிகள் தெரிவிப்பு



(தர்மேந்திரா)

எந்த துறையை எடுத்து கொண்டாலும் ஈழ தமிழ் இளையோர்கள் எவருக்கும் சளைத்தவர்களே அல்லர் என்று யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி ஆலயத்தின் கும்பாபிஷேக வைபவமும், அதனோடு இணைந்த விழாக்களும் கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்று வருகின்றன.

புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற அம்பிகை அடியார்கள் இத்தி மரத்தாள் புத்திரர்கள் திருப்பணி சபை என்கிற பெயரில் சுவிற்சலாந்தை தலைமையாக கொண்டு செயற்பட்டு இவ்வேலை திட்டங்களை முன்னெடுத்த வண்ணம் உள்ளனர்.

இவர்களின் வழிகாட்டல், அறிவூட்டல், நிதி பங்களிப்பு ஆகியவற்றில் இத்திமரத்தாயே என்கிற இசை இறுவெட்டு அரியாலை வெட்டுக்குளம் மண்ணின் மைந்தர்களின் பாடல் வரிகளில் தென்னிந்திய இசை கலைஞர்களின் இசையில் வெளிவந்து உள்ளது.

மண்ணின் மைந்தர்களான எம். வி. கே. குமணா, கா. கனகராசா, த. தர்மேந்திரா, எஸ். என். விஜிகாந்தன், கி. விதுஷிகா ஆகியோர் பாடல்களை எழுதி உள்ளனர்.

தென்னிந்தியாவை சேர்ந்த ஏ. சி. தினகரன் இசை அமைக்க தென்னிந்திய பாடகர்களான மதுபாலகிருஷ்ணன், சுர்முகி, சத்தியபிரகாஷ், மாலதி, வேல்முருகன், அனுராதா ஸ்ரீ ராம், மகாலிங்கம், உன்னிக்கிருஷ்ணன், வாணி ஜெயராம், சத்தியபிரகாஷ் ஆகியோர் பாடி உள்ளார்கள்.

இசை இறுவெட்டு வெளியீட்டு விழா இத்தி மரத்தாள் புத்திரர்கள் திருப்பணி சபையின் தாயக இணைப்பாளர் எம். வி. கே. குமணா தலைமையில் இடம்பெற்றது. இதில் மதுரகவி காரை எம். பி அருளானந்தன் கலந்து கொண்டு இறுவெட்டு மீதான ஆய்வுரையை மேற்கொண்டார். இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசிய வேலன் சுவாமிகள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. வாழ்க்கையில் இறைவனை இணைத்து கொள்கின்றபோதுதான் ஒவ்வொருவரினதும் வாழ்க்கை முழுமை பெறுகின்றது. எமது வதிவிடம் உள்ள ஊர்களில் ஆலயங்கள் இருத்தல் அவசியம்.

அங்கு நாம் வழிபாடுகள் மேற்கொள்வது இன்றியமையாதது. தெய்வத்தின் மீது முழுநம்பிக்கை வைத்து வழிபடுகிறபோது துன்பங்கள் நீங்குகின்றன என்பது எமது பெரியோர் எமக்கு காட்டி தந்த வாழ்க்கை முறை ஆகும். கும்பாபிஷேக வைபவங்கள் காலத்தின் தேவை ஆகும்.

ஆலயங்களில் எழுந்தருளுகின்ற இறைவனை நம் மனங்களிலும் எழுந்தருள செய்வதற்கு இசை பேருதவியாக உள்ளது. அரியாலை மண் கலை பாரியம் நிறைந்தது. இம்மண்ணின் மைந்தர்கள் மகத்தான கலைஞர்கள். அந்த வகையில் இந்த இசை இறுவெட்டு பெருமகிழ்ச்சி தருகின்றது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அந்த இனத்தின் கலை, கலாசார, பாரம்பரிய விழுமியங்களை அழித்தல் வேண்டும். அதுதான் வரலாற்றில் இடம்பெற்ற வண்ணம் உள்ளது. தமிழனின் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியன வாழ்கின்றபோதுதான் தமிழன் தமிழனாக வாழ முடியும்.

நான் இந்த இடத்தில் மிக முக்கியமான விடயம் ஒன்றையும் சொல்ல வேண்டி உள்ளது. தென்னிந்தியாவை உயர்வாக எண்ணுகின்ற போக்கு நம்மவர்களுக்கு இருக்கின்றது. ஆனால் எந்த துறையை எடுத்து கொண்டாலும் அந்த துறையில் நமது இளையோர்களுக்கு ஏனையோரை விடவும் அளப்பரிய ஆற்றல் இருக்கின்றது. இதற்கு இம்மண்ணின் மைந்தர்களால் இறுவெட்டுக்காக எழுதப்பட்ட பாடல்கள் அற்புதமான சான்றுகளாக உள்ளன.

மண், உரிமை, இனம் ஆகியவற்றுக்காக அளப்பரிய தியாகங்களை செய்தவர்கள் உலக வரலாற்றிலேயே நமது இளையோர்கள்தான் என்பது எனது ஆணித்தரமான கருத்து நிலைப்பாடாகும். எமது இளையோர்களுக்கு சரியான வழிகாட்டலும், அன்பும் வழங்கப்பட வேண்டும். சிறு வயதில் இருந்தே அறம், ஒழுக்கம் ஆகியன போதிக்கப்பட வேண்டும்.

ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் கூட்டு பிரார்த்தனையும், ஞாயிற்றுக்கிழமைகளில் அற நெறி வகுப்பு, தியானம், யோகாசனம் ஆகியனவும் கற்பித்து கொடுக்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்கு படிப்புகளை திணிப்பதை விடுத்து விளையாட்டு, கலை உள்ளிட்ட இதர செயற்பாடுகளிலும் ஆர்வத்தை ஏற்படுத்துதல் வேண்டும். அப்போதுதான் ஆளுமை மிக்க தலைவர்களை எம் மத்தியில் எதிர்காலத்தில் உருவாக்க முடியும்.

காலைக்கதிர் Kalaikkathir

## ராஜபக்ஷக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஊழல் எதிர்ப்பு குழு அங்கத்தவர்களை விசாரிக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் நேற்று சாட்சியம் அளித்து விட்டு, ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

வழமையாக அரசுகள் பதவிக்கு வரும். பின்னர் அது விழும். அதையடுத்துப் புதிய அரசு பதவிக்கு வந்து அதுவும் விழும். பின்னர் இன்னொரு அரசு ஆட்சிக்கு வரும். இதுவே வழமையாகியுள்ளது.

ஆனால், இன்று அரசு விழுவதற்கு முன் நாடு விழுந்து விட்டது. அண்டை நாடுகளிடம் கெஞ்சிக் கூத்தாடி கைமாற்று வாங்கி, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, பெருங்கடன்களின் மீள் செலுத்தும் தொகையைச் செலுத்திக் காலத்தை ஓட்டும் நிலைமைக்கு நாடு விழுந்து விட்டது.

ஆகவே, புதிய அரசொன்றை கட்டியெழுப்ப வேண்டும் என்பதை விட, புதிய நாடொன்றை உருவாக்க வேண்டும் என்றுதான் கூறவேண்டும்.

ஆகவே, இன்று இந்த நாட்டின் அரச எதிர்ப்பு சக்திகள் அனைத்தும் கரம் கோர்க்க வேண்டும். அதற்கு முன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும், 43ஆம் படையணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் கரம் கோர்க்க வேண்டும் - என்றார்.

---

## ஆளுநர் செயலகத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது அவர்கள் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றோம்.

போரால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த மற்றும் விசேட தேவையுடையவர்களைக் கொண்ட குடும்பத்தில் இருந்துதான் நாங்கள் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றோம்.

இந்நிலையில், கடந்த 21.01.2022 அன்று அமைச்சால் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் 60 தொண்டர் ஆசிரியர்கள் வடக்கு மாகாணத்தில் உள்ளார்கள் என்றும், அவர்களது நியமனம் தொடர்பாக ஆராயுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், வடக்கு மாகாணத்தில் 210 தொண்டர் ஆசிரியர்கள் உள்ளோம். 60 தொண்டர் ஆசிரியர்கள் எனக் குறித்த கடிதத்தில் எவ்வாறு வந்துள்ளது என எமது வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தை வினவியபோது அவர்கள் தமக்கு இது தொடர்பாக எதுவும் தெரியாது என்று கூறுகின்றனர். நாங்கள் இது தொடர்பாக அமைச்சில் உள்ளவர்களை வினவியபோது, வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் அனுப்பிய பெயர் விவரங்களின் அடிப்படையிலேயே தாங்கள் குறித்த கடிதத்தை அனுப்பியதாகத் தெரிவிக்கின்றனர்.

மிகுதி பேருடைய பெயர்களும் அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என நாங்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, உரிய அதிகாரிகள் எமது நிலையைக் கருத்தில்கொண்டு எமக்கான நியமனத்துக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் - என்றனர்.

---

## ஐக்கிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லாட்சியின்போது தலைமைப் பதவிகளை வகித்தவர்களின் செயற்பாடுகள் காரணமாகவே அந்த அரசு கவிழ்ந்தது. தற்போதைய அரசும் அப்படித்தான். எனவே, விரைவில் எங்கள் ஆட்சி வரும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சு பதவி எனக்கு வழங்கப்படும் என சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார். எமது ஆட்சி வருவது உறுதி என்பதால், எனக்கான அமைச்சுப் பதவியும் உறுதியாகியுள்ளது.

நல்லாட்சியின்போது, சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை எனக்கு வழங்குமாறு மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தப் பதவி எனக்கு வழங்கப்பட்டால் முதலில் அவரைத்தான் கைது செய்வேன் என அவர் அஞ்சினார். அதனால் பதவி வழங்கவில்லை - என்றார்.

---

## பொதுவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த உரிமையைப் பொருத்தமான இடத்திலேயே பயன்படுத்த வேண்டும். -

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

பல்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக்கொண்ட கட்சிகள், பொதுவானதொரு இலக்கை அடைவதற்காகப் பொதுவானதொரு வேலைத்திட்டத்தின் கீழ் இணைவதுதான் கூட்டணி அரசாகும். அங்கு கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் இருக்க வேண்டியது ஜனநாயகப் பண்பாகும். பயணம் தவறெனில் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு பங்காளிகளுக்கு இருக்கின்றது.

அதற்காக 'மைக்' கிடைக்கும் இடங்களில் எல்லாம் பொறுப்பற்ற விதத்தில் கருத்துகளை வெளியிடுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கூட்டம் நடைபெறும். அமைச்சரவைக் கூட்டமும் இடம்பெறும். அப்போது விமர்சனங்களை முன்வைக்கலாம். தவறுகளைச் சுட்டிக்காட்டலாம்.

அதனைவிடுத்து கூட்டுப் பொறுப்பை மீறும் வகையில் பொதுவெளியில் விமர்சங்களை முன்வைப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல - என்றார்.

---

## கைக்குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சித் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்ற இணைய வழி கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சம்பவத்தின் உண்மைத் தன்மை வெளிவரும் வரை இந்த அரசுக்கு எதிராக நாம் போராடுவோம். ஏனென்றால் இந்த அரசும், பொலிஸும் ஆடும் நாடகம் எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

அதனால்தான் காலையிலிருந்து குறித்த காட்சிகளைப் பார்வையிடுமாறு எங்களது அருட்தந்தைமார்களிடம் கூறினேன். அப்போது வெடிகுண்டை வேறு எவரும் கொண்டுவந்தனரா என்பதைக் கண்டுபிடிக்க முடிந்தது. எனினும், தற்போது 'முனி' என்ற நபரை இதில் சிக்க வைத்துப் பொலிஸார் கைகழுவ முயற்சித்தது.

மனச்சாட்சி உள்ள எவரொருவராலும் அவ்வாறு செய்வதற்கு இடமளிக்க முடியாது. எனவே, இந்த விடயத்திலிருந்து அரசு, பொலிஸார் நழுவிச் செல்லவிடமாட்டோம். எமக்கு நீதிமன்ற இருக்கின்றது. அதனை நாம் நம்புகின்றோம். எனவே, தற்போதைய பிழைகள் நீதிமன்றில் சரிசெய்யப்பட வேண்டும்.

இவர்தான் இதனைச் செய்துள்ளார் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மிகவும் விரைவாக ஒரு அறிவிப்பை வெளியிட்டார். எங்கோ வைத்தியசாலை குண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டை அந்த நபர் மீது சுமத்தப்பட்டது. மக்களை அடித்து, அச்சுறுத்திய நிலைநாட்டப்படும் நீதியை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை நாம் நிராகரிப்போம். எனவே, இந்த நபருக்கும், ஏனைய மூவருக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நாம் முன்வருவதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

# மின்வெட்டு இல்லை; ஜனாதிபதி உத்தரவு

நட்டில் மின்வெட்டை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டாம் என்று உத்தரவிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மின்வெட்டு நெருக்கடிக்குக் காரணமான நிதிப் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் தேவையான நிதியை ஒழுங்குபடுத்திக் கொடுக்கவும் பணித் துள்ளார்.

நேற்று காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என மின் வலு அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் வலு, சக்தி அமைச்சர் உதய கம்பன்பிலவும் பங்கு பற்றினார்.

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் இரண்டு எரிபொருள் தாங்கிக்கப்பல்களில் இருந்து எரிபொருளை விடுவிப்பதற்கு அவசியமான அந்நிய செலாவணி டொலரை உடனடியாக வழங்குமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்க வேண்டிய கடனை இலங்கை மின்சார சபை வழங்குவதற்காக, மின்சார சபைக்கு உரிய நிதியை வழங்குமாறு திறைசேரியை ஜனாதிபதி பணித்தார்.

# தமிழருக்கு அரசியல் தீர்வை வழங்க ஜே.வி.பி வலியுறுத்து

தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும்.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலி யுறுத்தினார்.

'அரசியல் தீர்வு மாத்திரம் தமிழ் மக்களின் பிரச்சி னைகள் அல்ல. அதைவிட அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைத் தீர்ப்பதே முக்கியம். அவற்றைத் தீர்த்து வைப்பது தொடர்பிலேயே முதலில் நாம் கவனம் செலுத்துகின்றோம்' என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அநுரகுமார எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பான அரசியல் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும்.

ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டே தீரும். தமிழர் பிரதிநிதிகளையும் எமது அரசில் இணைத்துப் பயணிப்போம்.

ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களைப் புறக்கணித்து - அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் இருந்தபடியால்தான் நாடு இன்று சர்வதேசத்திடம் மண்டியிட வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராகக் குற்றங்களை இழைத்த ராஜபக்ஷ அரசு, அதற்கான பொறுப்பை ஏற்றுப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் வழங்கியிருந்தால் இலங்கை விவகாரத்தில் ஐ.நாவும் சர்வதேச நாடுகளும் தலையிட்டிருக்க வேண்டிய நிலைவந்திருக்கமாட்டாது - என்றார்.

---

## இராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அவர் தமது வீட்டில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சுகாதாரப் பிரிவினர் நேற்றிரவு இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.

---

## திருட்டு மோ.சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுன்னாகம் மதுபானசாலை முன்பாக எதிரே வந்த குடும்பஸ்தர் ஒருவருடன் பலமாக மோதியல் இருவரும் பலத்த காயமடைந்தனர். எனினும் குடும்பஸ்தர் உயிரிழந்தார். படுகாயமடைந்தவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

---

## ஒமிக்ரோன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒமிக்ரோன் வேகமாகப் பரவுகின்றது. மக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களால் தொழில் புரியவோ அல்லது பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு வழங்கவோ முடியாது.

பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியைச் சந்திப்பதைத் தடுப்பதற்காக அரசு ஒமிக்ரோனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

சுகாதாரப்பணியாளர்கள் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடுமையாகப் பாடுபட்டனர்.

ஆனால், ஐரோப்பா ஒமிக்ரோனால் என்ன பாடுபடுகின்றது என்பதை நாங்கள் பார்க்கவேண்டும்.

ஐரோப்பாவில் 50 வீதமானவர்கள் ஒமிக்ரோனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களால் தொழில்புரிய முடியாத நிலை காணப்படுகின்றது.

ஒமிக்ரோன் வேகமாகப் பரவக்கூடியது. ஆனால், உயிரிழப்புகள் குறைவு. ஒருவர் பாதிக்கப்பட்டால் அவரால் வேலைக்குச் செல்ல முடியாது. இதனால் பொருளாதாரம் பாதிக்கப்படும்.

புதிய வைரஸ் குறித்தும் நடைமுறையில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்களுக்கு அரசு அறிவிக்க வேண்டும் - என்றார்.

## கொக்குவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







நொருக்கினர். வீட்டின் முன்பாக நிறுத்தி வைத்திருந்த காரையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இரு மோட்டார் சைக்கிளையும் தீ வைத்துக் கொளுத்தியதில் இரு மோட்டார் சைக்கிள்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## சுகிர்தராஜனின் 16 ஆவது நினைவேந்தல் நாளில்

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநீதிகளுக்கு நீதி கோரி மட்டு. நகரில் கவனவீர்ப்புப் போராட்டம்





மட்டக்களப்பு, ஜன. 25

திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப் பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16ஆவது நினைவேந்தல் நிகழ்வும், ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு நீதி கோரிய கவனவீர்ப்புப் போராட்டமும் இன்று முற்பகல் 11.30 மணியளவில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் அமைந்துள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவிய லாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியின் முன்னி லையில் நடைபெற்றது.

இதன்போதுபடுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் கோஷம் எழுப்பப்பட்டதுடன் பதாதைகளை ஏந்தி அமைதி வழிப் போராட்டம் நடத்தினர்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடக அமைப்புகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த ஞாபகார்த்த நிகழ்வுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞானமுத்து ஸ்ரீநேசன், மட்டக்களப்பு மாநகர பிரதி முதல்வர், பிரதேச சபை தவிசாளர், பிரதி தவிசாளர், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், சமூக நலன் விரும்பிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பூஸ்டர் தடுப்பூசி பெறாதவிடத்து மீண்டும் ஓர் அபாயம் ஏற்படும்!

## அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

அனைத்து செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவிடத்து மீண்டும் ஒரு முடக்க நிலையை நோக்கிச் செல்லவேண்டிய அபாயம் ஏற்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்.மாவட்ட சுகாதார மேம்பாட்டுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கொரோனா, டெங்கு, மலேரியா போன்ற தொற்று நோய் பரவலைத் தடுப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 19 ஆயிரத்து 62 பேர் கொரோனாத் தொற்றாளர்களாகவும் 502 இறப்புக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். தற்போது 35 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

தடுப்பூசியைப் பொறுத்தவரை 30 வயதுக்கு மேல் 3 லட்சத்து 9 ஆயிரத்து 839 பேரும் 29 தொடக்கம் 20 வயதுடையவர்களில் 56 ஆயிரம் பேரும் 12 தொடக்கம் 19 வயதுடையவர்களில் 57 ஆயிரம் 265 பேரும் முதலாவது டோஸைப் பெற்றுள்ளனர்.

பூஸ்டர் தடுப்பூசி என்பதை 88 ஆயிரத்து 800 பேர் பெற்றுள்ளனர். முதலாம், இரண்டாம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள், பூஸ்டர் தடுப்பூசியைக் கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

30 வீதமானவர்களே பூஸ்டர் தடுப்பூசியை இதுவரை பெற்றுள்ளனர். ஒமிக்ரோன் திரிவு தற்போது பரவிவரும் நிலையில் யாழ்.மாவட்டத்திலும் அது பரவுவதற்கான நிலைகள் காணப்படுகின்றன. இந்த சூழ்நிலையில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அவசியம். இதற்கமைய, எதிர்வரும் 31 ஆம் திகதி முதல், பூஸ்டர் தடுப்பூசி வாரம் பிரகடனப்படுத்தவுள்ளோம்.

பாடசாலை போக்குவரத்து உட்பட அனைத்துச் செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில் பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவிடத்து மீண்டும் ஒரு முடக்க நிலையை நோக்கிச் செல்ல வேண்டிய அபாயம் ஏற்படும். - என்றார்.

# கஜமுத்துடன் கைதான நபர் விளக்க மறியலில்!



முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கஜமுத்தை விற்பனைக்காக கொண்டுவந்த நபர் ஒருவரை சிறப்பு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளார்கள்.

முல்லைத்தீவு நகர் பகுதியில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 47 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவரை முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு பொலிஸார் குறித்த நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது குறித்த நபரை முதலாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா உத்தரவிட்டுள்ளார்.

# சாவகச்சேரியில் மின் மயானம் அமைப்பது தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல்





சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மின் மயானம் அமைப்பது தொடர்பான ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி கலந்து கொண்டு மின் மயானம் அமைப்பது தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடலை முன்னெடுத்திருந்தார். குறித்த கலந்துரையாடலின் போது -

சகல தரப்பினரையும் உள்வாங்கி மயான அபிவிருத்திக் குழு ஒன்றை முதலில் நிறுவி குறித்த குழு ஊடாக மின் மயான நடவடிக்கைகளை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் மின் மயானம் அமைப்பதற்கு தேவையான உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் எடுக்க முன்னராகவே 17 லட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டிருப்பதாக குறித்த கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஆரம்பக் கட்ட கலந்துரையாடலில் நகரசபை உறுப்பினர்கள் பங்கேற்று தமது ஆலோசனைகளையும் - கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர்.

கொரோனா அபாய காலகட்டத்தில் கொரோனா சடலங்களை சொந்த ஊரில் தகனம் செய்ய முடியாமல் வெளி மாவட்டங்களில் மின் தகனம் செய்ய வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டிருந்தது. எனவே இந்த கட்டான சூழ்நிலையில் இருந்து மக்களை மீட்கும் முகமாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்கு அமைவாக சாவகச்சேரி நகரசபையினர் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியுடன் மின் மயானம் அமைக்க எதிர்பார்த்து அதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2022இல் வெளியிடப்பெற்றது.